**THE LABOUR COURT, SALEM**
**I.D.No.47 of 2019**

**21.01.2026**

**PW1 – T. மணிகண்டன்**
**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி – (எதிர்மனுதாரர் தரப்பில்)**

என்னுடைய வீட்டு விலாசம், கதவு எண்.8/73, நெசவாளர் கூட்டுறவு சங்கத்தெரு, வெண்ணந்துார். இதற்கு முன்பு எனது வீட்டின் கதவு எண். 8/89 ஆக இருந்தது என்றால் சரிதான். இந்த முகவரியில் மணிகண்டன், த/பெ தியாகராஜன் என்ற பெயரில் நான் மட்டும்தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

எதிர்மனுதாரர்களின் அலுவலகம் முற்றிலும் அரசு துறை சார்ந்த அலுவலகம் என்றால் சரிதான். அரசால் வகுக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் விதிகள் படிதான் ஒரு பணியாளரை பணியமர்த்த முடியும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் Diplomo ECE பட்டயபடிப்பை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளேன். எனக்கு வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் அழைப்பு கடிதம் வந்து முதல் எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தேனா என்றால் அழைப்பு கடிதம் வரவில்லை, செய்தித்தாள் விளம்பரம் போட்டிருந்தார்கள்.

செய்தித்தாள் விளம்பரத்தின் மூலமாகத்தான் பணியில் சேர்ந்தேன் என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. முதல்எதிர்மனுதாரர் அலுவலகத்திலிருந்து நேர்முகத்தேர்வு குறித்து கடிதம் எதுவும் எனக்கு

வரவில்லை. செய்தித்தாள் விளம்பரம் பார்த்து முதல்எதிர்மனுதாரர் அலுவலகம் போனேன், அங்கு Interview வைத்தார்கள். நேர்முகத்தேர்வில் கலந்துகொண்ட பிறகு எனக்கு பணிநியமண உத்தரவு எதுவும் வரவில்லை. 11.07.2012 ல் நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டு அன்றைய தினமே பணியில் சேர்ந்துவிட்டேன். மேற்படி விபரங்களை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தொழிற்தகராறு மனுவில் என்னென்ன விபரங்கள் சொல்லியுள்ளேன் என்று எனக்கு தெரியும்.

என்னிடம் காட்டப்படும் 22.07.2014 தேதியிட்ட கடிதத்தில் உள்ளது என்னுடைய கையொப்பம்தானா என்றால் என்னுடையதல்ல. முத்தாயம்மாள் பாலிடெக்னிக் காலேஜில் என்னுடைய பட்டயபடிப்பை முடித்தேன் என்றால சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படுவது 15.06.2007 ம் தேதியிட்ட என்னுடைய பாலிடெக்னிக் கல்லூரி மாற்றுச்சான்றிதழ் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பட்டய சான்றிதழ், மதிப்பெண் பட்டியல் மற்றும் Course Completion Certificate அனைத்தும் என்னுடையதுதான்.

**1) 15.06.2007 ம் தேதியிட்ட மனுதாரரின் பாலிடெக்னிக் கல்லூரி மாற்றுச்சான்றிதழ் – நகல் – Ex.R1.**

**2) மனுதாரரின் அக்டோபர் 2007 க்கான பட்டயசான்றிதழ் – நகல் Ex.R2.**

**3) மனுதாரரின் மொத்த மதிப்பெண் பட்டியல் – நகல் – Ex.R3.**

**4) 07.05.2007 – Course Completion Ceritificate – நகல் – Ex.R4.**

ஏற்கனவே நான் Specialist Services என்ற நிறுவனத்தில்

பணிபுரிந்தேன் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ்தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படுவது என்றால் சரிதான்.

**5) 12.12.2012 தேதியிட்ட Specialist Services கொடுத்த மனுதாரரின் பணிச்சான்றிதழ் – நகல் – Ex.R5.**

இந்த சான்றிதழ் கொடுக்கும் தேதிவரை நான் மேற்படி நிறுவனத்தில் வேலை பார்த்தேனா என்றால் இல்லை, 6 மாதங்களுக்கு முன்பே வேலையை விட்டு வந்துவிட்டேன். Visa முடிவதால் அந்த தேதியில் சான்றிதழ் கொடுத்துள்ளார்கள். பொதுவாக ஒரு நிறுவனத்தில் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவுடன் பணிச்சான்றிதழ் கொடுப்பார்கள் என்றும், வழக்கிற்காக visa முடிவதால் பணிச்சான்றிதழ் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால், நான் விடுமுறைக்காக கம்பெனி உள்ள இடமான துபாயிலிருந்து சொந்த ஊருக்கு வந்தேன். குடும்ப பிரச்சனையால் திரும்ப வேலைக்கு செல்லமுடியவில்லை.

முதல்எதிர்மனுதாரர் அலுவலகத்தில் ஒப்பந்த புள்ளி ஆவணம் கோருவதற்காகத்தான் ஆவணங்களை சமர்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. வேலைக்கு சேரும்போதுதான் ஆவணங்களை கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணங்களை நேர்முகத்தேர்வின்போதே முதல்எதிர்மனுதாரரிடம் கொடுத்துவிட்டேன் என்னிடம் காட்டப்படும் வக்காலத்து ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் 21.07.2014 ம் தேதியிட்ட தொகை செலுத்திய ரசீதில் உள்ள கையெழுத்து என்னுடையதில்லை. 21.07.2014

தேதியிட்ட என்னிடம் காட்டப்படும் கடிதம் நான் எழுதவில்லை. என்னுடன் சதீஸ் என்பவர் வேலை பார்த்தாரா என்றால் நான் மட்டும்தான் எலெக்ட்ரிக்கல் வேலை பார்த்தேன். சதீஸ் யார் என்று எனக்கு தெரியாது. நான் வேலை பார்த்த சமயத்தில் முதல்எதிர்மனுதாரர் அலுவலகத்தில் செயல் அலுவலராக கோவிந்தராஜ் என்பவர் இருந்தார். கோவிந்தராஜ் என்பவரது கையொப்பம் அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது.

Ex.P4 என்னுடைய வங்கிக்கணக்கு பட்டியல் என்றால் சரிதான். நான் பணியாளராக வேலை செய்ததாக சொல்லும் சமயத்தில் சம்பளம் எப்படி கொடுத்தார்கள் என்றால் நான் வேலைக்கு சேர்ந்த சமயத்தில் கையில்தான் சம்பளம் கொடுத்தார்கள். பின்னிட்டு அரசாணை வந்தபிறகு 2013 க்கு பிறகு வங்கிக்கணக்கில் சம்பளம் போட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள வங்கிக்கணக்குப்பட்டியலில் எந்த மாதம் எந்த தேதியில் 1ம் எதிர்மனுதாரர் சம்பளம் வரவு வைத்துள்ளார் என்றால் 03.09.2015 தேதியில் காசோலைமூலமாக ரூ.8,500/– வரவு வைத்துள்ளார்கள். அவர்களே காசோலைமூலமாக மாதமாதம் வரவு வைத்துவிடுவார்கள். கையில் கொடுக்கமாட்டார்கள்.

வங்கிக்கணக்குப்பட்டியலில் காசோலை வரவு வைக்கப்பட்ட தேதியில் சம்பளம் என்று காட்டவில்லை என்றால், சரிதான். வங்கிக்கணக்குப்பட்டியல் பிரிண்ட் எடுக்கும் போது இவ்வாறு வந்துள்ளது. ஒவ்வொரு மாதமும் ஒரே தொகை கொடுக்கப்படவில்லை என்றும், வெவ்வேறு தொகைக்கான காசோலை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் செய்யும் வேலைக்கு தகுந்தாற்போல்

கொடுப்பார்கள். முதல்எதிர்மனுதாரர் அலுவலகத்தில் நான் ஒப்பந்ததாரராகத்தான் வேலை செய்துவந்தேன் என்றும், நான் செய்த வேலைக்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொகை கணக்கீடு செய்து முதல்எதிர்மனுதாரரால் காசோலையாக வழங்கப்பட்டது என்றும், அந்த தொகையை சம்பளம் என கூறிக்கொள்ள எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் மட்டும்தான் எலெக்ட்ரீசியனாக முதல்எதிர்மனுதாரர் அலுவலகத்தில் வேலை பார்த்தேன். வெண்ணந்துார் பேரூராட்சி முழுவதற்கும் நான்மட்டும்தான் எலெக்ட்ரீசியனாக வேலை பார்த்தேன். எனக்கு கீழ் வேறு யாரும் வேலை பார்க்கவில்லை.

அலுவலகத்தில் பிளம்பிங், வாட்டர் பைப் வேலை பார்க்கும் பிற நபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். அவர்களுடன் எனக்கு நல்ல பழக்கமா என்றால், இல்லை. அவர்களுக்கு வெளியில் வேலை, எனக்கு அறையில் வேலை. காலை 9.30 மணிக்கு அலுவலகத்திற்கு வேலைக்கு போனேன். வருகைப்பதிவேட்டில் கையெழுத்து போடவில்லை. வருகைப்பதிவேடு அங்கு வைத்திருந்த விபரம் எனக்கு தெரியும். ஆனால் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. தினமும் செயல்அலுவலரை பார்த்து வணக்கம் சொல்வேன். அவ்வாறு சொன்னாலே நான் வேலைக்கு வந்ததாக அர்த்தம் என்றால் சரிதான்.

முதல்எதிர்மனுதாரர் அலுவலகத்தில் நான் பணியாளரே கிடையாது என்றும், வழக்கிற்காக பணியாளர் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது கைப்பட கடிதம் எழுதி கொடுத்து ஒப்பந்ததாரராக கையெழுத்து போட்டு கொடுத்துவிட்டு வழக்கிற்காக

பணியாளர் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 2 ஆவணங்களிலும் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தொழிற்தாவா மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். ஒப்பந்த நிபந்தனைகள் என்ற ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல.

ஒப்பந்த நிபந்தனைகள் ஆவணத்தில் உள்ள கையெழுத்தையும், தொழிற்தாவா மனுவில் உள்ள கையெழுத்தையும் கையெழுத்து நிபுணரிடம் பரிசோதணைக்காக அனுப்புவதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. நான் முதல்எதிர்மனுதாரரின் பணியாளரே அல்ல என்றும், என்னுடைய தொழிற்தாவா மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem